# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | :Case No. | C C 416/2025 |
| **Deposition of witness for** | Prosecution<br>Defence<br>Court | P W 5 |

| | | |
|---|---|---|
| Name | : | முருகேசன் |
| Father's Name | : | பழனிசாமி |
| Village | : | ரெங்கநாதபுரம் |
| Taluk | : | பெரம்பலூர் |
| Calling | : | கூலி |
| Religion | : | இந்து |
| Age | : | 56 |
| ACCUSED | எதிரி சடையப்பன் ஆஜர். | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2026

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ரெங்கநாதபுரத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்து போன சரவணன் எனது மகன் ஆவார். அதே விபத்தில் இறந்து போன ராஜேஷ் என்பவர் எனது மகனின் நண்பர் ஆவார். கடந்த 8 1/2 வருடங்களுக்கு முன்பு எனது மகன் சரவணனும் அவருடைய நண்பர் ராஜேசும் இருசக்கர வாகனத்தில் பெரம்பலூர் சென்றுவிட்டு எங்கள் ஊருக்கு வந்து கொண்டிருந்தார்கள். நானும், காளியும், அங்கப்பனும் ஆகியோர் மது அருந்துவதற்காக ஆதரவற்றோர் பள்ளி அருகே சென்ற பொழுது பெரம்பலூரிலிருந்து அரியலூர் நோக்கி வந்து கொண்டிருந்த இருசக்கர வாகனத்தை ராஜேஷ் ஓட்ட எனது மகன் பின்னால் அமர்ந்து வந்தார். எதிரே செட்டிக்குளத்திலிருந்து வந்த பால் ஏற்றி வந்த லோடு ஆட்டோ வேகமாக வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்திவிட்டது. அந்த விபத்தில் எனது மகன் சரவணனுக்கு தலையில் சக்கரம் ஏறி இறங்கிவிட்டதாக

அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த ராஜேசிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. ராஜேஷை மருத்துவமனைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். விபத்தில் இறந்து போன எனது மகனை அரசு தலைமை மருத்துவமனைக்கு எடுத்து சென்று சவக்கிடங்கில் வைத்துவிட்டோம். விபத்து சம்மந்தமாக போலீசாரிடம் புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். விபத்தில் காயம்பட்ட ராஜேஷ் சிகிச்சை பலனின்றி இரண்டு நாட்களுக்கு பின்பு இறந்துவிட்டதாக தகவல் சொன்னார்கள்.

**குறுக்கு விசாரணை:– (எதிரி தரப்பில்)**

எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போட தெரியும். என்னிடம் காட்டப்பட்ட புகார் மனுவில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவில் எனது மகன் இறந்த அன்று இரவு 8 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன். புகார் மனுவில் கையெழுத்து செய்யும் பொழுது நான் மது போதையில் இருந்ததால் மேற்படி புகார் மனுவில் எழுதப்பட்டிருந்து என்பது குறித்து எனக்கு தெரியவில்லை. நான் எனது வீட்டிலிருந்து மாலை 6 மணியளவில் மது கடைக்கு சென்றேன். மதுக்கடைக்கு என்னுடன் காளி, அங்கப்பன் ஆகியோர் மட்டும்தான் வந்தனர். வேறு யாரும் எங்களுடன் வரவில்லை. விபத்தை நான் நேரில் பார்த்தேன். மேற்படி விபத்தில் எனது மகன் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரியாமல் இருந்தேன். தென்வடல் சாலையில் நான் மேற்கு பக்கமாக இருந்தேன். விபத்து சாலையின் நடுப்பகுதியில் நடைபெற்றது. நான் இருந்த இடத்திற்கும் விபத்து நடைபெற்ற இடத்திற்கும் சுமார் அரை பர்லாங் தூரம் இருக்கும். விபத்து நடைபெற்ற சமயத்தில் இருட்டாக இருந்தது. சம்பவ இடத்தில் நானும், காளியும், அங்கப்பனும் மட்டும்தான் இருந்தோம். வேறு யாரும்

அங்கு இல்லை. விபத்து நடைபெற்று 10 நிமிடம் கழித்து மற்ற நபர்கள் வந்தார்கள். விபத்து சமயத்தில் நாங்கள் நடந்து சென்று கொண்டிருந்தோம். வழக்கு சம்மந்தமாக என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்கவும் விபத்தில் இறந்து போன நபர் எனது மகன் என்பதாலும் நான் இழப்பீடு பெற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் விபத்தை நேரில் பார்த்ததாகவும் விபத்து தொடர்பாக புகார் கொடுத்ததாவும் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. குமார் த/பெ. தங்கராசு என்பவர் அரசலூரைச் சேர்ந்தவர். அவர் விபத்தை கேள்விபட்டு நான் காவல் நிலையத்தில் இருந்த பொழுது வந்தார். அதற்கு முன்பு அவர் வரவில்லை.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

**ஒப்பம்/–கி.முரளிதரக்கண்ணன்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**